IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO.147-2010**

**PW2--** திரு**.** நாகராஜ்**,** த**.**பெ**.** திம்மராயப்பா

தேதி**: 11.08.2025.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை **:**

1. என்னை சாட்சியம்அளிக்க 3ம் வாதி சாந்தப்பா அழைத்து வந்தார். சாந்தப்பா எனது சித்தப்பாவின் மகன் ஆவர். எனது தந்தை பெயர் திம்மராயப்பா. 3ம் வாதி சாந்தப்பாவின் தந்தை பெயர் முனியப்பா ஆகும். வழக்கு சொத்து 3ம் வாதிக்கு பிதுராஜிதமாக பாத்தியப்பட்டது. வழக்கு சொத்து ஆதியில் 3ம் வாதியின் தாத்தா சின்னசொர்ணப்பாவிற்கு பாத்தியப்பட்டது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சர்வே எண்.50/1ஏவில் உள்ள சொத்து என்து தந்தை திம்மராயப்பாவிற்கும், சர்வே எண்.50/1பியில் உள்ள சொத்து முனியப்பாவிற்கும் பாத்தியப்பட்டது என்றும். சர்வே எண்.50/1சியில் உள்ள சொத்து அவர்கள இருவர் வீட்டிற்காக கூட்டாக ஒதுக்கப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் நிரூபண வாக்குமூலத்தில் மேலே சொல்லியுள்ளவாறு அனுபவத்து வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கும் சித்தப்பா முனியப்பாவிற்கும், 2012ம் ஆண்டில் சர்வே எண்.50/1ஏ, 1பி, 1சி ஆகியவற்றில் உளள சொத்தைப்பற்றி பாகப்பத்திரத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2. நான் சொல்வதைப்போல் சர்வே எண்.50/1ஏவில் உள்ள சொத்து எனது தந்தைக்கும் சர்வே எண்.50/1பியில் உள்ள சொத்து எனது சித்தப்பா முனியப்பாவிற்கும், சர்வே எண்.50/1சியில் உள்ள சொத்து பொதுவாகவும் பிரிக்கப்பட்டிருந்தால் 2012ம்

ஆண்டில் ஏற்பட்ட பாகப்பத்திரத்தில் மேற்சொன்ன மூன்று சர்வே எண்களையும், முனியப்பா பாகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்காது என்றாலும், நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சர்வேண்.50/1ஏ, 1பி, 1சியில் உள்ள சொத்துக்களை 1ம் பிரதிவாதியின் தாத்தா ஆவலமுனியப்பாவிற்கு பாகம் உள்ளது என்றாலும், ஆனால் யு.டி.ஆர் இல் தவறுதலாக முனியப்பா மற்றும் திம்மராயப்பா ஆகியோர் பெயரில் மொத்த சொத்திற்கும் பட்டா ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.50-ல் உள்ள மொத்த சொத்தும் ஆதியில் 1ம் பிரதிவாதியின் தாத்தா ஆவலமுனியப்பா அவருடைய தம்பி கிருஷ்ணப்பா, அவருடைய மருமகன்கள் பைரப்பா, பைரப்பாவின் மகன் சொன்னன்னன், மற்றொரு மகளின் மருமகனான சொன்னன்னன் ஆகியோருக்கு 664/1914ம் ஆவணத்தின் கீழ் பொதுவாக பாத்தியப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

3. மேற்சொன்ன ஆவண எண்.664/1914 பாகப்பத்திரத்தின் அடிப்படையில் சர்வே எண்.50-ல் உள்ள சுமார் 25 சென்டை 1ம் பிரதிவாதியின் தாத்தா ஆவலமுனியப்பா ஒதுக்கப்பட்டு அவருடைய அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. ஆனால் யு.டி.ஆரில் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டதால் 1ம் பிரதிவாதி தனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட 25 சென்டிற்கு சர்வே எண்.50/1பியில் உள்ள 0.62.5 ஹெக்டேர்ஸ் இடத்தை உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்கும் படி வட்டாட்சியரிடம் மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வழங்கிய மனுவின் பேரில் சொத்துக்களை ஆய்வு செய்து 26.03.2004ம் தேதி வட்டாட்சியர் 1ம் பிரதிவாதி பெயரில் புதிய சர்வே எண்.50/1பி1-ல் 0.10.0ஹெக்டேர்ஸ் இடத்திற்கு தனிப்பட்டா வழங்கி உத்தரவிட்டார் என்றால் சரியல்ல. அதேபோல் சர்வே எண்.50/1பி2வில் 0.52.5 ஹெக்டேர்ஸ் இடத்திற்கு சின்னசொன்னப்பா மகன் முனியப்பா பெயரில் தனிப்பட்டா வழங்கினார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சர்வே எண்.50/1பி1ல் 8சென்டை மோரனப்பள்ளி கிராம பஞ்சாயத்திற்கு ரோடு அமைப்பதற்காக தானம் கொடுத்துள்ளார்

என்றால் அரசு அதிகாரிகள் சொத்திடம் வந்தபோது தான் எனக்கு அந்த விவரம்தெரியும். 1ம் பிரதிவாதி பஞ்சாயத்திற்கு சொத்தை தானம் கொடுத்தபிறக அந்த சொத்திற்கு சர்வே எண்.50/1பி1பி-ல் பட்டா எண்.2854 என பஞ்சாயத்து பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றால்ச ரியல்ல. மீதம் உள்ள சொத்திற்கு 1ம்பிரதிவாதி பெயரில் புதிய சர்வே எண்.50/1பி1ஏ , பட்டா எண்.2853-ன் கீழ் தனிப்பட்டா வழங்கப்பட்டது.

4. 1ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து ரோட்டிற்கு வடக்கு புறம் அமைந்துள்ளது என்றாலும், வாதிகளுக்கு பாத்தியப்பட்டது ரோட்டிற்கு தெற்கு புறம் அமைந்துள்ளது என்றாலும், அவர் அவர் சொத்தை அவர் அவர்கள் தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், நான் சொல்வதைப்போல் வழக்கு முழுவதும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. வாதிகள் உண்மையான விவரங்களை மறைத்து பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும். வாதிகள் கோரியுள்ளபடி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**3, 4** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது**.**

(ஒம்/-ஆர்.நரசிம்மமூர்த்தி)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்.